Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 5th & 6th of Every month

| Regd. No. TN / CC (S) DN / 119 / 09-11 | Lincensed to Post without prepayment WPP No. TN / CC (S) DN / 51 / 09-11 |
| --- | --- |

வேணு : 15 ஜூன் 2010 கானம் : 11



பின் - நாங்கள் வசந்தோத்ஸவம் ; முன் அட்டைப்படம் -

Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No. 2, Old No. 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083. and Printed by Mrs. Sri.Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar.

**Related Websites : www.namadwaar.org www.madhuramurali.org**

**Email:contact@namadwaar.org**

NO FAME · NO NAME · NO SELF INTEREST · ONLY GOD


ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

Rs.10/-

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

வேணு : 15 | ஜூன் 2010 | கானம் : 11



மதுரபுரி ஆஸ்ரமத்தில் வசந்தோத்ஸவம்



தாமரைப்பாக்கம் கிராம கோவில்கள் கும்பாபிஷேகம் மே 22



அமெரிக்கா சியாட்டிலில் சம்பிரதாய கேம்ப் – மார்ச் 29 – ஏப்ரல் 2



ஆலப்பாக்கம் பாகவத சப்தாஹம் அக்ஷயத்ருதியையன்று (மே 16–22)



பெங்களூர் கோரமங்களாவில் நடந்த மாதுர்யா கேம்ப் – மே6 – 17



நாத்வார் அன்பர்களுக்கான சிறப்பு கோடைக்கால பயிற்சி வகுப்பு (ஏப்ரல்29 – மே5) இடம் – மதுராபுரி ஆஸ்ரமம்



அயனாவரம் கரியமாணிக்கம் பெருமாள் கோவிலில் உடையவர் ஸ்ரீராமானுஜரின் சரித்திரம் – உபன்யாசம் – ஸ்ரீராம்குமார் (மே12-21)




மும்பை அம்பர்நாத் பாலாஜி கோவிலில் "பக்திக்கு பகவான் சுலபன்" – உபன்யாசம் – பூர்ணிமாஜி – மே 9



மலேசியா கோலாலம்பூர் நாமத்வாரில் self improvement workshop - by - சுனிதாஜி – மே 12

ஸ்ரீ ஹரி :
மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு:15 ஜுன் 2010 கானம்:11

உள்ளே ...


| | | | |
|---|---|---|---|
| கீர்த்தனம் | 02 | பாகவத பழம் -2ம்பாகம்- 3 | 11 |
| மதுரமான மஹனீயர் - 171 | 03 | துலாபாரமும் பிரார்த்தனையும் | 21 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 06 | ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் | 30 |
| நாமத்வார் - சிறப்பு கோடைவகுப்பு | 10 | மாலே மணிவண்ணா - 84 | 32 |


**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

**அவர் அவர் செய்த கர்ம வினைகளுக்கான பலனையே, அவர் அவர்கள் அனுபவிக்கின்றார்கள் என்பதே உண்மை. இந்த உலகம் அந்த நியதிப்படிதான் இயங்கி வருகின்றது. அப்படி இல்லையென்றால், இவ்வளவு பெரிய பிரபஞ்சத்தை படைத்தும், பிரளய காலத்தில் தன்னிடத்தில் ஒடுக்கி கொள்ள போகும் பகவானுக்கு, அதை சரியாக நடத்தி செல்ல தெரியவில்லை என்றல்லவோ ஆகிவிடும்?**

**–மஹாரண்யம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி**



## கீர்த்தனம்

*ஸ்ரீஸ்வாமிஜி அவர்களை பற்றி அன்பர் ஒருவர் பாடியது*



**கு**ருவின் அடியொற்றி வாழும் உத்தமனே வாழி
**ரு**க்வேத ஸாரமறிந்தோனே வாழி
**ஜி**க்ஞாஸையின் பொருளை உணர்ந்தோனே வாழி
**மு**முமுதற்பொருளை வழிபடுவோனே வாழி
**ர**ஹஸ்யமெதுவும் அண்டாதவனே வாழி
வ**ளி**களின் பொருளை உரைக்கவல்லோனே வாழி
**த**ரமுள்ள அடியார் குழுவுடையாய் வாழி
**ர**மிக்கும் பொருள் இறைவனே என்றாய் வாழி
**ஸ்**வபாவமான பெருமையுடையோனே வாழி
**வா**திடும் கருத்தை தவிர்ப்பவனே வாழி
**மி**க்க புகழுடையான் அடிபணிந்தாய் வாழி
**வா**க்கு வன்மையினால் வசீகரித்தாய் வாழி
(வா)**ழ்**வாங்கு வாழும் வகையறிந்தாய் வாழி
**க**ற்றதனாலாய பயன் பெற்றாய் வாழி
என்றும் மக்கள் தொண்டாற்றுவாய் வாழி
இன்று இச்சிறுமடலை ஏற்றிடுவாய் வாழி

இவண்
வழுத்தூர் ஆழிக்கையன்
வடமொழி ஆசிரியன் (சக்ரபாணி)

# மதுரமான மஹனீயர் – 171

(டாக்டர். ஆ.பாக்யநாதன்)

மதுரபுரி ஆஸ்ரம வளாகத்தில் நடந்து வரும் ஸ்ரீசாந்தீபனி குருகுல வேதபாடசாலையில் பல வெளியூர் குழந்தைகள் தங்கி, படித்து வருகின்றனர். பிற பள்ளிகள் போல, இங்கும் வருடம் தோறும், கோடைகால விடுமுறை உண்டு. இவ்வருடம், விடுமுறையை ஒட்டி, மே மாதம் முதல் தேதி, குழந்தைகள் அவரவர் சொந்த ஊர்களுக்கு (வீட்டிற்கு) கிளம்பி சென்றார்கள். அனைத்து குழந்தைகள் முகத்திலும், மகிழ்ச்சியும் புன்னகையும் விளையாடியது. ஒருவனது முகத்தை தவிர!



மே மாதம் முதல் தேதி அன்று ஸ்ரீஸ்வாமிஜி பெங்களூர் கிளம்பி சென்றிருந்தார்கள். மறுநாள் இரவு ஆஸ்ரமம் திரும்பினார்கள். மதுரபுரி ஆஸ்ரமத்தில் வசந்தோத்சவத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வந்தது. வாஹனங்கள் பெயிண்ட் அடிக்கப்பட்டு வந்தன. ஆனால் ப்ரேமிக வரதனோ வேறு ஒரு திட்டம் போட்டிருந்தான். அது அப்பொழுது தெரியவில்லை.

பெங்களூரிலிருந்து திரும்பி வந்தது முதலே, ப்ரேமிகவரதன் முகம் வாடியிருப்பது, ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்கு தெரிந்தது. அன்று இரவிலிருந்து ப்ரேமிக வரதன் ஸ்ரீஸ்வாமிஜியிடம், "பாடசாலை குழந்தைகள் எல்லோரும் ஊருக்கு சென்று விட்டார்கள். நானும் ஏதாவது ஊருக்கு செல்ல வேண்டும்" என்று அடம் பிடிக்க ஆரம்பித்தான். ஸ்ரீஸ்வாமிஜி பலவாறு சமாதானம் செய்து பார்த்தார். அவனோ விடுவதாகவே இல்லை. அவன் அடம் அதிகமானதே ஒழிய குறையவே இல்லை.



ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்கு ப்ரேமிக வரதன் சொல்வதை கேட்பதை தவிர, வேறு வழி இருக்கவில்லை.

மறுநாள் மாலை ஸ்ரீஸ்வாமிஜி ப்ரேமிகவரதன் சன்னதியில் வழக்கமாய் அமர்ந்தவுடன், பரபரப்பாக காணப்பட்டார். ப்ரேமிக வரதன் அருகில் அமருவதும், எழுந்து நடப்பதுவுமாய் இருந்தார். அவனுடன் மிக நெருங்கி பேசுவது போலவும், அவனையே பார்த்துக்கொண்டிருப்பதாகவும் இருந்தார். சிறிது நேரம் சென்றபின் "நான் அவனுக்கு இங்கு வசந்தோத்ஸவம் செய்ய முடிவு செய்திருந்தேன். அவனோ திருநாங்கூருக்கு செல்ல முடிவு செய்திருக்கிறான்" என அருகிலிருந்தோரிடம் சொன்னார் ஸ்ரீஸ்வாமிஜி. (அவனது தொந்தரவு பொறுக்க முடியாமல்) அவனை சீர்காழிக்கு அருகிலுள்ள திருநாங்கூருக்கு ஸ்ரீஸ்வாமிஜி அழைத்து செல்ல முடிவு செய்தார். ப்ரேமிக வரதன் கிளம்ப ஆயத்தமாகி விட்டான்; அப்பொழுது அன்பர் ஒருவர் ஸ்ரீஸ்வாமிஜியிடம் "கோடை காலத்தில் நாங்கூருக்கு ப்ரேமிக வரதனை அழைத்து செல்கிறீர்களே? வெப்பம் அங்கு அதிகமாக இருக்குமே. ஏதாவது ஒரு குளிர் பிரதேசத்துக்கு அவனை கூட்டி செல்லலாமே" என்றார். ஸ்ரீஸ்வாமிஜி சற்றும் தயங்காது "ப்ரேமிக வரதன் எங்கு செல்கின்றானோ அங்கெல்லாம் பூமியை குளிர்வித்து விடுவான்" என்று சிரித்துக்கொண்டே சொன்னார். அன்பர் மேலும், என்று திரும்புவீர்கள் என்று கேட்க ஸ்ரீஸ்வாமிஜி "அவன் கிளம்புவது கூட எனக்கு இப்பொழுதுதான் தெரியும். அவன் எப்பொழுது திரும்புகிறான் என்று அவனுக்கே தெரியும். எல்லாம் அவனிஷ்டம்" என புன்னகையுடன் சொன்னார்.



சீர்காழி அருகிலுள்ள இத்திருநாங்கூரில் ஏறத்தாழ பதினோரு திவ்யதேச தலங்கள் உள்ளன. இவற்றில் பல ஸ்ரீஸ்வாமிஜியின் வழிகாட்டுதலின்படி ஏகதேசமாக திருப்பணி செய்யப்பட்டு இருக்கிறது.

திருப்பணியோடு மட்டுமல்லாமல் நித்ய பூஜைக்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு உள்ளது. இந்த நித்யபூஜைக்கு தேவையானவற்றை, நமது சைதன்ய மஹாபிரபு நாமபிக்ஷா கேந்திரா செய்து வருகிறது. இங்குதான் நமது ஸ்ரீமதி ஜெயந்திஜானகிராமன் நினைவு வைணவ ஆகம பாடசாலை நடந்து வருகிறது. இங்கு வைணவ ஆகமமும், நாலாயிர திவ்ய பிரபந்தமும், வேதமும் கற்பிக்கப்படுகிறது.





ப்ரேமிகவரதன் ஒரு கல்லை எறிந்தால் அதில் பல பழங்கள் விழும். அப்படித்தான் அவன் செயலுக்கு பல காரணங்கள் இருக்கும். நாங்கூர் வைணவ பாடசாலையை ஸ்ரீராம்குமார் நிர்வகித்து வருகிறார். ப்ரேமிகவரதன் மாதுரிஸகியுடன், ஸ்ரீஸ்வாமிஜி வந்தவுடன் அவருக்கு ஆச்சரியமும் சந்தோஷமும் பொங்கியது; திக்குமுக்காடி விட்டார். அவர் முந்திய தினம்தான் "ப்ரேமிக வரதனை பார்க்க முடியவில்லையே; அவனுக்கு கைங்கரியம் செய்து வெகு நாட்களாயிற்றே" என்று அழுதிருக்கிறார். ஸ்ரீராம்குமாருக்கு தரிசனம் தருவதற்காகவும் ப்ரேமிகவரதன் அடம்பிடித்திருக்கிறான்!!

ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் சொன்னது போலவே அக்னி நக்ஷத்திரம் கூடியிருந்த பொழுதும் கூட, மாதுரிஸகியுடன் ப்ரேமிகவரதன் சீர்காழியில் அடியெடுத்து வைத்தானோ இல்லையோ, ஒரே மழை; நாங்கூரில் 4ம்தேதி இரவும் 5ம் தேதி காலையும் நல்ல மழை பெய்தது. அவ்விருநாட்கள்தான் ப்ரேமிக வரதன் அங்கிருந்தான். அவனது கோடை விடுமுறை அவ்வளவுதான்! முதல் இருநாட்கள் அங்கு துவங்கிய வசந்த உத்ஸவம் மதுரபுரி ஆஸ்ரமத்தில் பூர்த்தியானது.





# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

**கேள்வி: எனது மகன் தர்மகாரியங்களுக்கு அதிகம் செலவிடுகிறான். எவ்வளவு சொன்னாலும் கேட்பதில்லை. "தனக்கு மிஞ்சிதான் தானமும் தர்மமும்" என்று பெரியவர்களே சொல்லி வைக்கவில்லையா?**

பதில்: "தனக்கு மிஞ்சிதான் தானமும் தர்மமும்" என்பதன் உண்மையான பொருள் என்ன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். மனிதர்களால், காரியங்களில் ஈடுபடாமல் இருக்க முடியாது. மனிதர்கள் புலன்களை கொண்டு பிறந்தது முதல், ஏதோ ஒரு செயலை செய்து கொண்டே இருக்கின்றார்கள். ஒரு க்ஷணம் கூட சும்மா இருக்க முடிவதில்லை. இப்படி ஓயாமல் காரியங்கள் செய்தும் மரணத்திற்கு பின், ஒருவருடன் மிஞ்சி வருவது என்ன? அவன் கட்டிய வீடா? அவனுடைய காரா? அவனுடைய பட்டமா? அவனுடைய புகழா? அவனுடைய அழகா? அவனுடைய பதவியா? அல்லது சொந்த பந்தங்களா? இவைகளில் எதுவும் உடன் வராது. அவன் செய்த தானமும் தர்மமும்தான் அவனுக்கென்று மிஞ்சும்; அதைத்தான் பெரியவர்கள் அழகாக, தனக்கு மிஞ்சிதான் தானமும் தர்மமும் என்று சொல்லியுள்ளார்கள். தனக்கென்று மிஞ்சுவது அவரவர் செய்த தானமும் தர்மமும் மட்டும்தான் என்பதுதான் இதன் உண்மையான பொருள்.

**கேள்வி: தலைக்கவசம் போடாமல் இருசக்கரவாகனம் ஓட்டுவது என் வழக்கம். கடவுளின் நாமத்தை உச்சரித்து வரும் என்னை அவர் எச்சமயத்திலும் காப்பாற்றுவார்தானே?**

பதில்: கடவுளின் நாமத்தின் மேல் பக்தி உள்ளவர், அந்த நாமத்துக்கு களங்கம் வராதவாறு நடந்து கொள்ள வேண்டும். கடவுள் நம் ஒவ்வொருவருக்கும் தந்த பரிசு சமயோசித புத்தி. அதை புறக்கணித்து, விதண்டாவாதம் செய்வது, நாமம் சொல்பவருக்கு அழகல்ல.

**கேள்வி: நண்பர் ஒருவர், கேளிக்கையும் ஆடம்பரமுமாக, வாழ்ந்து**

**வந்தார். கடவுளின் நாமம் கூட அவர் சொல்லி நான் பார்த்ததில்லை. திடீரென, தான் கடவுளை நேரில் பார்த்து விட்டதாக கூறுகிறார். என்னால் நம்ப முடியவில்லை! இது உண்மையாக இருக்க முடியுமா?**

பதில்: உங்களுக்கு உதாரணம் சொன்னால் நன்றாக புரியுமென்று நினைக்கிறேன். வெளிநாடு சென்று பணம் சம்பாதிக்கும் லட்சியம் கொண்ட ஒருவர், தனது தேவைகளை எப்படி எல்லாம் மாற்றி கொள்கிறார்? இடம் புதிது; மனிதர்கள் புதிது; கலாசாரம் புதிது; இப்படி பல அசௌகரியங்கள் இருந்தாலும், தனது விருப்பங்களை தியாகம் செய்து வாழ்கிறார். இதற்கும் மேல் அப்படி செல்லும் பலர் தங்களது குடும்பத்தை கூட அக்காலத்தில், துறந்தல்லவா வாழ்கிறார்கள்? அப்பொழுதுதான் அவரால் பொருளீட்ட முடியும்.

மாநிலத்திலேயே முதல் மதிப்பெண் எடுக்க ஆசைப்படும் மாணவன், தொலைக்காட்சி பார்ப்பதில்லை. விளையாடுவதை குறைக்கிறான்; அரட்டையடிப்பதில்லை. தூக்கத்தை குறைத்து படிக்கிறான். அப்பொழுதான் அவனால் அவனது லட்சியத்தை சாதிக்க முடியும். விளையாட்டு வீரர்கள், போட்டிகளில் வெல்ல எவ்வளவு கடின பயிற்சிகளை மேற்கொள்கின்றனர்? எங்காவது தூங்கியவன் வென்றதாக சரித்திரம் உண்டா? இப்படி பலரும், தங்கள் தங்கள் லட்சியங்களை அடைய பலவற்றை தியாகம் செய்துதான் அடைகின்றனர். இதை மறுக்கவே முடியாது.

தியாகம் செய்யாமல், இந்த உலகத்தில் கூட, எதுவும் கிடைக்காது. கடவுள் தரிசனம், ஆத்மானுபவம் என்பவை லட்சியங்களிலேயே உயர்ந்தவை. அந்த மிக பெரிய விஷயத்தை , சிறிய தியாகம் கூட செய்யாமல் எப்படி அடைய முடியும்? நீங்கள் சொல்வது உண்மையாக இருக்க வாய்ப்பே இல்லை.

**கேள்வி: நான் இருக்கும் இடத்திலிருந்து, கடவுளின் நாமத்தை சொன்னால், அவர் வந்து விடுவார் என்று சொல்கிறீர்களே? அவரை என்னால் பார்க்க முடியவில்லையே? உங்களை எப்படி நம்புவது?**

பதில்: உங்களது சகோதரர் பெயர் கோபால் என்போம். நீங்கள் உங்கள் வீட்டினுள் அவரை ஏதோ ஒன்றிற்காக, அவரை பெயரிட்டு



கூப்பிடுகிறீர்கள். அதே சமயம் உங்கள் வீட்டு வழியாக ஒருவர் சாலையில் செல்வதாக வைத்து கொள்வோம். அவர் பெயரும் கோபால் என்போம். நீங்கள் வீட்டினுள் உங்கள் சகோதரரை கூப்பிடுவது, சாலையில் செல்பவருக்கு கேட்கிறது. அவருக்கு உங்களை தெரியவே தெரியாது. நீங்கள் கூப்பிடுவதை அவர் எதிர்பார்க்கவுமில்லை. ஆனாலும், தன் பெயர் தன் காதில் கேட்ட உடன், அப்படிப்பட்ட முன்பின் தெரியாதவர் கூட, திரும்பி பார்ப்பார் அல்லவா? அப்படி இருக்க பகவானான கோபாலனை விட, நம்மை நன்கு அறிந்தவர் யார் இருக்க முடியும்? அவன் குழந்தைகளான நாம் அவனை எப்பொழுது கூப்பிடுவோம் என்று அவன் காத்துக்கொண்டு இருக்கிறான். நமக்கு அருள காத்துக்கொண்டு இருக்கிறான். அவன் எங்குமிருப்பவன். அப்படி இருக்கையில் கைகளை தூக்கி, "கோபாலா" என அழைத்தால், அவன் ஓடி வரமாட்டானா? அதுதான் நாமத்தின் பலம்.


The D Studio
www.dexterousinfo.com
Quality is never an accident
It is always the result of intelligent effort
www.vapssky.com
dex gamez
www.dexgamez.com
Mobile Data Security Systems
Mobile Enhancement Utilities
Multimedia Content Exchange
3d Multiplayer Games
Roblock
Theft Recovery System for Blackberry - Windows mobile - Sony Ericsson mobile phones
Roblock provides protection and safety from theft or losing your mobile phones and helps to retrieve it back. Now the users can forget the fear of losing their mobile phones by protecting it using Roblock software.
SMS notification on SIM Change
Recover contacts from lost phone
Remote WIPE memory card
Complete Stealth operations
contact@dexmobile.com
Ph: +91 960019777

**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Gururam Consulting Private Limited**




## நாமத்வார் உறுப்பினர்களுக்கான ஒரு சிறப்பு கோடை வகுப்பு

தமிழகமெங்கும் உள்ள நாமத்வார் மையங்களில் பணிபுரிந்து வரும் அன்பர்களுக்கான கோடைக்கால பயிற்சி முகாம் மதுரபுரி ஆஸ்ரமத்தில் நடந்தது. ஏப்ரல்29 முதல் மே5 வரை ஸ்ரீராமானுஜம் இதை மிகவும் அழகாகவும், நேர்த்தியாகவும் நடத்தினார். தினமும் விடியற்காலையில் தியானம் பயின்ற பின், மஹாமந்திர நாமகீர்த்தனம் 8மணி வரை நடந்தது.

பின் பாகவதத்திலிருந்து சுலோகங்கள் கற்றுவிக்கப்பட்டது. உபன்யாசம் செய்யும் முறை, அதற்காக குறிப்பு எடுத்து கொள்வது, நாட்குறிப்புகள் எழுதுதல், நாமத்வாரில் வருவோரிடம் பழகும் விதம், நாமத்வாரின் லட்சியம், அவரவரின் பங்கு போன்றவை கலந்துரையாடலாகவும், எடுத்துக்காட்டுகளாகவும் அமைந்திருந்தன. ஸ்ரீராமானுஜம், ஸ்ரீவல்லபதாஸ் ஆகியோர் பாகவதம், மஹாபாரதத்திலிருந்து பக்தர்களின் சரித்திரங்களை எடுத்துரைத்தனர்.

இருநாட்கள், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களே, அன்பர்களுக்கு மிக எளிதில் புரியும்வண்ணம், வேதாந்தகருத்துக்களை எடுத்துரைத்தார். தினமும் மதிய உணவிற்கு பின், மஹாமந்திரகீர்த்தனம் நடைபெற்றது. சில எளிதான ஆசனபயிற்சியும் தரப்பட்டது.


ஸ்ரீபாக்யநாதன், "மதுரஸ்மரணம்" என்ற தலைப்பில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் வாழ்க்கையிலிருந்து சுவையான சம்பவங்களை எடுத்து கூறினார். மேலும், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் வழிகாட்டுதலின்படி நடைபெற்று வரும் ஸ்தாபனங்களை பற்றியும், அவற்றின் பணிகள் குறித்தும், சுருக்கமாக பேசினார். மாலை வேளைகளில் ஸ்ரீகல்யாண ஸ்ரீனிவாசபெருமாள் ஆலயத்தில் திவ்யநாமகீர்த்தனங்களை ஸ்ரீபம்மல் பாலாஜி சொல்லி தந்தார். தினமும் காலை சிற்றுண்டி, மதிய உணவு, இரவு உணவு வழங்கப்பட்டது. 40 அன்பர்கள் இதில் கலந்துகொண்டு பயனுற்றனர் . கலந்து கொண்டோருக்கு, இறுதி தினத்தன்று அண்ணாநகர் ஸ்ரீபலராமன் சான்றிதழ்கள் வழங்கினார்.



## பாகவத பழம் 3

**இரண்டாம் பாகம்**

– ஸ்ரீஸ்வாமிஜி



பகவான் வேணுகானம் செய்தபொழுது விலங்குகள் நின்றதில் ஆச்சரியமில்லை. ஆனால் வியாசரின் சிஷ்யர்கள், அந்த பர்ஹாபீடம் என்னும் ஸ்லோகத்தை சொன்னதற்கே அப்படி ஒரு பலன் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

அன்னம், பானம், தூக்கம் எதுவும் இல்லாமல் இருக்கும் சுகருடைய ஸமாதியை இந்த சுலோகம் கலைத்தது. இதிலிருந்தே பாகவதம் நிர்விகல்ப ஸமாதியையும் தாண்டிய அனுபூதி என்று தெரிய வருகின்றது அல்லவா?

சுகர் அந்த குழந்தைகளை பார்த்து, இந்த சுலோகத்தை தனக்கு சொல்லி தரும்படி கேட்டார். அவர்களோ, இதைப்போல் 18000 ஸ்லோகங்கள், எங்களுடைய குருநாதரிடம் உள்ளது. வாருங்கள் என்று அழைத்து வந்தார்கள். வந்து பார்த்தால் அவர்களுடைய குரு தன்னுடைய அப்பாவேதான், வேறு யாரும் இல்லை என்பதை புரிந்து கொண்டார். தந்தையும் தனையனும், ஒருவரை ஒருவர், ப்ரேமாலிங்கனம் செய்து கொண்டார்கள். பாகவதத்திலிலுள்ள இந்த ஒரு சுலோகம் தந்தையையும் தனயனையும் சேர்த்து வைத்தது என்றால், முழுபாகவதம் என்னதான் செய்யாது? ஒரு ரீதியில் பார்த்தால், பிரிந்த குருவையும் சீடனையும், சேர்த்து வைத்தது என்றும் கூட சொல்லலாம்.

வேதத்தை, எப்படி சந்தை திருவை சொல்லி அத்யயனம் செய்வார்களோ, அப்படி சுகர் தந்தையிடம், ஸ்ரீமத்பாகவதத்தை கற்றுக்கொண்டார். அல்லது கேட்டுக்கொண்டாராம். நிர்விகல்பசமாதியே கைகூடிய சுகருக்கு, பாகவதம்



கற்றுக்கொண்டு என்ன ஆகவேண்டும் என்றால், இதனால் விஷ்ணுவின் ஜனங்களான வைஷ்ணவர்களுடைய அபிமானத்திற்கு பாத்திரமானால்தான், பகவானுடைய அபிமானத்திற்கு பாத்திரமாக முடியுமாம். வைஷ்ணவர்கள் பகவத் குணத்தையும், பகவானுடைய கீர்த்தனைகளையும் தவிர எதையும் மதிக்க மாட்டார்களாம். இப்படி நிர்விகல்ப ஸமாதியிலிருந்து பாகவதம் சொல்வதற்காக ஸஹஜ சமாதிக்கு வந்த சுகரிடம் பாகவதம் கேட்டதால்தான், பரீக்ஷித்துக்கு சிரவணமாத்திரத்தினாலேயே ஸமாதி கைகூடியது.





பாரத தேசத்தில் எவ்வளவு புண்ணிய க்ஷேத்திரங்கள் இருக்கும்! பதரியிலிருந்து ஆரம்பித்து, சேது வரை லட்சக்கணக்கில் இருக்கும் அல்லவா? அதுபோல் எவ்வளவு பெரிய பெரிய கோவில்கள் இருக்கும். இவைகளையும் கணக்கில் அடக்க முடியாது. அதுபோல் சிறிய சிறிய கோவில்கள் எவ்வளவு இருக்கும்!

காஞ்சிபுரம், தஞ்சாவூர், மதுரை, கும்பகோணம் என்ற ஊர்களில் மட்டுமே ஆயிரக்கணக்கில் கோவில்கள் உள்ளன. அப்படி இருக்கும்பொழுது ஒருவிதத்தில் பார்த்தால் புண்யநதிகளில் நீராடுவதோ, க்ஷேத்திரங்களுக்கு செல்வதோ,

கோவில்களுக்கு செல்வதோ கூட பெரிய விஷயமில்லை. ஆனால், நாம் வாழும் காலத்தில் ஒரு மஹாத்மாவும் வாழவேண்டும். இதுவே மிகவும் அரிதானது. அந்த மஹாத்மாவை பகவான் அருளால் நமக்கு அறிந்து கொள்வது அதிலும் அரிதானது. அப்படி அறிந்தாலும் அவரை நாம் சென்று தரிசனம் செய்ய வேண்டும். அப்படி தரிசனம் செய்தாலும், நூற்றோடு நூறாக இல்லாமல், அவர் அருகாமையில் சென்று தரிசனம் செய்வது அதிலும் அரிதானது. அப்படிப்பட்ட மஹானையே அண்டி , இராப்பகலாக கதி என்று கிடப்பவனுடைய ஸம்ஸாரசக்கிரம் இனி சுழலாது. நின்று விடும். அப்படிப்பட்ட மஹாத்மாவிடமிருந்து ஸ்ரீமத்பாகவதம் கேட்பது எவ்வளவு பெரிய பாக்கியம்!

> நிர்விகல்ப ஸமாதியிலிருந்து பாகவதம் சொல்வதற்காக ஸஹஜ சமாதிக்கு வந்த சுகரிடம் பாகவதம் கேட்டதால்தான், பரீக்ஷித்துக்கு சிரவண மாத்திரத்தினாலேயே ஸமாதி கைகூடியது.

தஸமஸ்ய விஸித்யர்த்தம் நவாமிவ லக்ஷணம் - அதாவது ஒன்பது ஸ்கந்தங்களின் கதையும், கதை கேட்பவர்களை, படிப்பவர்களை, ஏற்பாடு செய்பவர்களை, சுத்தி செய்து பத்தாவது ஸ்கந்தத்தை படித்து புரிந்து கொள்வதற்கான தகுதியை தருமாம். நவமஸ்கந்தத்தில், இதுவரையில் எந்தெந்த இடங்களில் எல்லாம் கிருஷ்ணனுடைய நாமமும் வைபவமும் பெருமையும் சொல்லப்படுகின்றது என்று பார்ப்போம். கிருஷ்ண அவதாரம் ஏற்படுவதற்கு முன்பாக வரக்கூடிய அவதாரங்களிலேயே கிருஷ்ணன் பெயர் வருவது கவனிக்கத்தக்கது.




பிரதமஸ்கந்தத்தில், நாரதருக்கும் வியாசருக்கும் ஸம்வாதம் வருகின்றது. நாரதர், தன்னுடைய பூர்வ ஜன்ம சரித்திரத்தை சொல்லும்பொழுது, ஸாதுக்களிடம் கிருஷ்ண கதை கேட்டேன் என்கின்றார்.

**தத்ரான்வஹம் க்ருஷ்ணகதா: ப்ரகாயதா**
**மநுக்ரஹேணாஶ்ருணவம் மநோஹரா:**
**தா:ஸ்ரத்தயா மே (அ)நுபதம் விஸ்ருண்வத:**
**ப்ரியஶ்ரவஸ்யங்க மமாபவத் ருசி: (1-5-26)**

பிறகு தன்னுடைய சரீரம் கீழே விழும்பொழுது கிருஷ்ணனையே நினைத்துக்கொண்டே கீழே விழுந்தேன் என்கின்றார்.

**ஏவம் க்ருஷ்ணமதேர் ப்ரம்ஹன் அஸக்தஸ்யா மலாத்மன:**
**கால: ப்ராதுரபூத் காலே தடித் சௌதாமநீ யதா (1-6-28)**

அதே போல், பாண்டவ வம்ஸத்தையே பூண்டோடு அழிப்பேன் என்று சபதம் செய்து, உத்தரையின் வயிற்றில் கருவாக இருந்த பரீக்ஷித்தை அழிக்க ப்ரம்மாஸ்திரம் போட்ட பொழுது , உத்தரை பகவானை வந்து சரண் அடைய, பகவானோ பிரம்மாஸ்திரத்துக்கு பிரதியாக சுதர்ஸன சக்கரத்தை பிரயோகம் செய்து, தன்னுடைய வம்ஸத்தை காப்பாற்றிய பகவானின் கருணையை நினைத்து, குந்தி அதி ஆச்சரியமான துதி செய்கின்றாள். அந்த ஸ்துதியில் க்ருஷ்ணன் என்ற நாமத்தையே பல இடத்தில் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.



இதில் குறிப்பிடத்தககது.

**க்ருஷ்ணாய வாஸுதேவாய தேவகீ நந்தநாய ச:**

**நந்தகோப குமாராய கோவிந்தாய நமோ நம: (1-8-21)**

குந்தி ஸ்துதியை அடுத்து வருவது பீஷ்மஸ்துதி. அந்த பீஷ்மரும் க்ருஷ்ணனிடத்தில் மனதை செலுத்தி அந்திம ஸ்வாஸத்தை ஸ்வாஸித்தார் என்பதை பார்க்கின்றோம்.

**க்ருஷ்ண ஏவம் பகவதி மநோவாக் த்ருஷ்டி வ்ருத்திபி:**

**ஆத்மன்யாத்மான மாவேஸ்ய ஸோSந்த: ஶ்வாஸ உபாரமத் (1-9-43)**

பரீக்ஷித்தினுடைய ஜாதகத்தை பரிசோதித்த தெய்வக்ஞர்கள் இவன் க்ருஷ்ணனுக்கு சமமான குணங்கள் உடையவனாக இருப்பான் என்றார்கள்.

**ஸர்வ ஸத்குண மாஹாத்ம்யே ஏஷ க்ருஷ்ணமனுவ்ரத:**

**ரந்திதேவ இவோதாரோ யயாதிர்வ தார்மிக: (1-12-24)**

மேலும் பரீக்ஷித் க்ருஷ்ணனுடைய அனுக்ரஹத்தால்தான் அழியவில்லை என்றும் வருகின்றது.

**யோவை த்ரௌண்யஸ்த்ர விப்லுஷ்டோ ந மாதுருதரே ம்ருத:**

**அனுக்ரஹாத் பகவத: க்ருஷ்ணஸ்யாத்புதகர்மண:(1-19-1)**

பரீக்ஷித் குழந்தையாக இருக்கும்பொழுது க்ருஷ்ண விஷயமான விளையாட்டுக்களிலேயே ஈடுபட்டான் என்கின்றார்.

**ஸ வை பாகவதோ ராஜோ பாண்டவேயோ மஹாரத:**

**பாலக்ரீடநகை: க்ரீடன் க்ருஷ்ணக்ரீடாம் ய ஆததே (2-3-15)**

| |
|---|
| கிருஷ்ண அவதாரம் ஏற்படுவதற்கு முன்பாக வரக்கூடிய அவதாரங்களிலேயே. கிருஷ்ணன் பெயர் வருவது கவனிக்கத்தக்கது. |

(கனியும்)



## சனாதனப் புதிர் - பகுதி - 16

( விடைகள் அடுத்த இதழில்)

– ஆத்ரேயன்

1. ப்ரஹ்மசூத்ரம் யாரால் செய்யப்பட்டது? அதற்கு எத்தனை விளக்க உரைகள் இருக்கின்றன? இந்த உரைகளை எழுதியவர் யார்?
2. கந்தர் அந்தாதி என்ற நூல் அருணகிரிநாதர் எப்பொழுது இயற்றினார்?
3. சுக்ரீவன் என்பது ஒரு குதிரையின் பெயர். இந்த குதிரை யாரிடம் இருந்தது?
4. பஞ்ச யக்ஞங்கள் எவை?
5. ஏழு சிரஞ்சீவிகள் பற்றி எல்லோருக்கும் தெரியும். இவர்களை தவிர மூன்று சிரஞ்சீவிகள் இருக்கின்றனர். இவர்கள் யாவர்?
6. ஸ்மிருதிமுக்தாபல நிபந்தன கிரந்தம்- இதை எழுதியது யார்? இதன் மற்றொரு பெயர் என்ன?
7. ராமேஸ்வரம், வேதாரண்யம், பட்டீஸ்வரம் - இந்த மூன்று க்ஷேத்திரங்களுக்கும் ஸ்ரீராமருக்கும் என்ன சம்பந்தம்?
8. தந்த்ர வார்த்திகம் என்ற நூல் யாரால் செய்யப்பட்டது? இதற்கு விளக்க உரை எழுதியவர் யார்?
9. ஐம்பெரும் காப்பியங்கள் எவை? யாரால் எழுதப்பட்டது?
10. பிராமணன் எப்படி இருக்க வேண்டும்?



# துலாபாரமும் பிரார்த்தனையும்

மேஷம் முதல் மீனம் வரை 12ராசிகள். அந்த ராசிகளில் ஆடு, காளை, மிதுனம், நண்டு, சிம்மம், கன்னி, தராசு, தேள், வில், மகரம், கும்பம், மீனம் போன்றவற்றில், உயிர் இல்லாதது மூன்றே மூன்றுதான். ஒன்று துலாம்; மற்றொன்று வில்; மற்றொன்று கும்பம்; அதில் ஒன்றான துலாம்தான் சுவாதி நக்ஷத்திரத்திற்கு ராசி. பகவான் யோகிராம்சுரத்குமாரின் நக்ஷத்திரம் சுவாதி. அதாவது துலா ராசி. அந்த துலாராசிக்கான தராசை கொண்டே ஒரு அதிசயத்தை நிகழ்த்த விரும்பியது வியப்பொன்றும் இல்லையே? அப்படி அவர் நிகழ்த்திய ஒரு லீலையை இந்த கட்டுரையில் காண்போம். இத்தகைய லீலைகளை பகவான் நிகழ்த்துவதன் நோக்கம் என்னவென்றால், தாம் எங்கும் நீக்கமற நிறைந்திருப்பதையும், பக்தர்கள் கூப்பிட்ட குரலுக்கு ஓடிவருவேன் என்பதையும், கருணையால், நமக்கு மீண்டும் மீண்டும் உணர்த்துவதுதான்.



கன்னியாகுமரி மாவட்டத்தில் காணிமடம் எனும் இடத்தில், திருவண்ணாமலை யோகிராம்சுரத்குமார் அவர்களுக்கு கோவில் உள்ளது. அவருடைய பக்தர்களில் ஒருவர்தான் அதை கட்டினார். அது தெய்வ சான்னித்யம் நிறைந்துள்ள இடம் என்று ஸ்ரீஸ்வாமிஜி கூறுவதுண்டு. அங்கு அதிசயமான சம்பவம் ஒன்று நிகழ்ந்தது.

குருவாயூரப்பன் கோவிலில், துலாபாரம் தருவது போல் பக்தர்கள் காணிமடம் கோவிலிலும் துலாபாரம் தருவர். வேண்டியது நிறைவேறினால், துலாபாரத்தில், எடைக்கு எடை வேண்டியபடி பொருள் தருவது உண்டு.

பக்தர் ஒருவர், ஒருமுறை சர்க்கரை துலாபாரம் தருவதாக



ஏற்பாடு. குடும்பத்துடன், குறிப்பிட்ட நாளன்று, மூட்டை மூட்டையாக சர்க்கரையோடு காணிமடம் வந்தார் பக்தர்.

காலையில் துலாபாரம். சர்க்கரையெல்லாம் பத்திரமாக வைத்தாயிற்று. பகவானை வேண்டிக்கொண்டு, துலாபாரத்தில் உட்கார்ந்து சர்க்கரையை வைத்தனர். துலாபாரம் சமமாகவில்லை. பக்தர் உட்கார்ந்திருந்த தட்டு தாழ்ந்தே இருந்தது. தேவையான அளவு கொண்டு வந்திருந்த போதிலும், பகவான் ஏற்றுக்கொள்ளவில்லையே என அனைவரும் கவலையுற்றனர்.

பலர் விசாரித்து பார்க்கையில், ஒருவிஷயம் தெரிந்தது. பலர் அன்று தரிசனத்திற்கு வந்திருந்தனர். வைத்திருக்கும் சர்க்கரை துலாபாரத்திற்கு என தெரியாமல், சமையல்காரர், அதிலிருந்து நிறையவே எடுத்து விட்டார். பக்தர்களின் ததியாராதனைக்காக சமையலில் பயன்படுத்தி விட்டார். யாருக்கும் இது தெரியாது.

விஷயம் தெரிந்தவுடன் துலாபாரத்தில் உட்கார்ந்திருந்த பக்தருக்கு கையும் ஓடவில்லை; காலும் ஓடவில்லை. வேண்டுதல் அல்லவா! துலாபாரத்தில் உட்கார்ந்தாயிற்று. அருகில் சென்று அவ்வளவு சர்க்கரையும், உடனே வாங்க முடியாது. என்ன செய்வதென பலரும் கைகளை பிசைந்தனர். ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டனர். பலர் தங்களிடமிருந்த பல இனிப்புகளை தட்டில் வைத்தனர். தட்டு சமமாகவில்லை. தடுமாறி போயினர் துலாபார தம்பதிகள்.

அப்பொழுது ஒரு அன்பரிடம் அவர் மனைவி "நாம் சமீபத்தில் யோகிராம்சுரத்குமார் அவர்களை தரிசனம் செய்கையில் அவர் கல்கண்டு தந்தாரே; அது என்னிடம் உள்ளது. அதை போடலாமா" என்றார். "ஆ! தாராளமாய்; தா. நான் போடுகிறேன்" என்று, அந்த 50கிராம் கல்கண்டு பாக்கெட்டை மனைவியிடமிருந்து வாங்கினார், அந்த அன்பர். பகவானை மனதில் தியானித்து, துலாபாரத்தின் அருகில் போய் நின்றார். ஒரு பரவச நிலையை அடைந்தார் அவர். அப்படியே அவர் அந்த பாக்கெட்டை வைக்க

போக, அதிலிருந்து ஒரே ஒரு கல்கண்டு கட்டி மட்டும், தராசில் விழுந்தது. மறுகணம் தராசு சமமாயிற்று.

எல்லோரும் அந்த கல்கண்டு வைத்த அன்பரை ஆச்சரியமுடன் விசாரித்தனர். அவர் சொன்னார் "சமீபத்தில் பகவான் யோகிராம்சுரத்குமார் அவர்களை தரிசிக்க திருவண்ணாமலை சென்றிருந்தேன். அவர் அப்பொழுது எனக்கு கல்கண்டு பிரசாதம் அளித்தார். அதை நான் பத்திரமாக வைத்திருந்தேன். அதைத்தான் நான் வைத்தேன்" என்றார். எல்லோரும் அறிந்து ஆச்சரியப்பட்டனர்.

பகவான் கிருஷ்ணனுக்காக வைத்த துலாபாரத்தில் ருக்குமணி வைத்த ஒரு துளசி இலையின் முன், சத்தியபாமா வைத்த பல தங்க ஆபரணங்களும் ஈடாகவில்லை. மேற்கண்ட சம்பவம் அந்த நிகழ்ச்சியை நினைவூட்டுகின்றது.

SRI GURUBYO NAMAHA
GURU CHARANAM AT THE FEET OF GURU PADHUKA BHAVA HARANAM
PRANAMS TO THE LOTUS FEET OF HIS HOLINESS
SRI "MURALIDHARA SWAMIJI"
JP
JANAKI PHARMACY
32/17, SUBBA STREET
WEST MAMBALAM
CHENNAI - 33
PH: 044-45512125 (CELL: 9884724271
viswanathan.1071@rediffmail.com
SPECIAL DISCOUNT AVAILABLE
FREE DOOR DELIVERY
CHANT "OM SRI RAM JAI RAM JAI JAI RAM" ENJOY THE SWEETNESS OF RAM NAM



## பாலகர்களுக்கு ஒரு கதை



## மூக்கு சித்தர்

முட்டாள் என்பதற்கு பொருத்தமாக ஒரு சிலர் காரியம் செய்வார்கள். முட்டாள்தனத்தினால் ஏமாற்றமும், தோல்வியும், அலைக்கழிப்பும் சகஜம். முட்டாள்தனத்துடன் பேராசை சேர்ந்தால் சமயத்தில் அதிக பொருளிழப்பும் இருக்கும். எப்படி பார்க்கினும் அவமானம் உண்டு. அறிவை பயன்படுத்தாது இப்படி செய்யப்படும் காரியங்களுக்கு பலனாய், சொல்லொணா துன்பம் வந்துவிடும். அப்படி ஒன்றுதான் இது.

சிவபுரம் எனும் ஊரை சுந்தரன் எனும் மன்னன் ஆண்டு வந்தான். நீதி நெறி தவறாத அவனுடைய ஆட்சியில், ஒருமுறை கொள்ளை சம்பவம் தொடர்பாய் ஒரு திருடன் பிடிபட்டான். ஏற்கனவே பல திருட்டுகளில் அவன் சம்பந்தப்பட்டிருந்ததால், கடுமையான தண்டனையளிக்க முடிவு செய்தான் மன்னன். அவன் மறுபடி தவறு செய்ய வாய்ப்பளிக்க கூடாது என்பதற்காக அவனுடைய மூக்கை அறுத்து விட்டு விட்டான். மூக்கு அறுந்தால் உலகில் தலை காட்ட முடியாது. அழகும் போயிற்று; காரணம் கேட்பார்கள்; விஷயம் தெரிந்தால் அவமானம் தாங்காதல்லவா? மூக்கறுந்த திருடன் சிவபுரத்தை விட்டு ஓடினான். ஊர் எல்லைக்கு வெளியே, நல்ல தூரத்தில் வனம் இருந்தது. அங்கேயே தங்க ஆரம்பித்தான் அவன். அவ்வனம் வழியாக வியாபாரிகள் சென்று வருவது வழக்கம்.

அப்படி வந்த பல வியாபாரிகள் வேற்றூரை சேர்ந்தவர்கள். அவர்களில் ஒருவன் இந்த திருடனை பார்த்தான். அடர்ந்த வனத்தில் தனியாளாய் இருக்கும் திருடனை பார்க்கையில், அவ்வியாபாரிக்கு யாரோ முனிவர் என தோன்றியது. அவ்வளவுதான்! அந்த திருடனுக்கு அன்று முதல் அதிர்ஷ்ட தேவதையின் பார்வை விழ ஆரம்பித்தது. ஓரிருவர் அவனை வணங்கி செல்ல ஆரம்பித்தனர். "மரத்தடியில் இருக்கும் அவர்

பெரிய சித்தர்; அவருக்கு எல்லாம் தெரியும்; அவரை வணங்கி சென்றேன்; எனக்கு நன்மை கிடைத்தது" என்றெல்லாம் உளற ஆரம்பித்தனர். இதற்கெல்லாம் காரணம், எதேச்சையாக நடந்த சில சம்பவங்கள்தான். சரியான முயற்சிக்கு பலன் கிடைத்ததை சிலர் இவரை வணங்கியதால்தான் கிட்டியது என்றனர். இன்னும் சிலர் இப்படி பேசினால் இவரின் அருள் கிடைக்கும் என்று திருடன் முன் பேசுவர். இதை கேட்போர் பிரமித்து ஏமாறுவர்.

திருடன் சாமர்த்தியசாலி. முட்டாள் அல்ல; பேசினால் தன் குட்டு என்றாவது வெளிப்பட்டு விடும் என்பதால், அவன் வாயே திறக்கவில்லை. உணவு, பழங்கள், புது உடைகள் என அனைத்தும் அவனுக்கு கிடைக்கலாயிற்று. பலர் சேர்ந்து அவன் தங்குவதற்கு, ஒரு குடிலும் போட்டு கொடுத்து விட்டனர். "மூக்கறுந்ததனால் தனக்கு ஏக நன்மை அல்லவா விளைந்திருக்கிறது" என்று கூட திருடன் நினைக்க ஆரம்பித்து விட்டான்.

ஓராண்டு கழிந்தது. திருடனுக்கு தன்னுடைய புது வேஷம் பழக்கமாகி விட்டது. ஆரம்பத்தில் யாராவது தன்னை அடையாளம் கண்டுவிடப்போகிறார்களே என்றிருந்த அவனது பயம், மனிதர்கள் கொடுத்த மரியாதையினால் ஓடியே போயிற்று. மனதில் இருந்த கொஞ்ச நஞ்ச கவலைகளும் அகன்று விட்டதால், அழகாய் தன்னை வணங்குவோரை பார்த்து சிரிப்பான். எல்லோரும் வழிபோக்கர்கள் என்பதால், யாரும் அவனுடன் தொடர்ந்து இரார். இது அவனுக்கு நன்மையுமாக போயிற்று.

இந்த புது சித்தரின் புகழ் ஏகமாய் பரவியதில், வனத்துக்கு மறுபுறத்தில் இருந்த நந்திபுரத்தில் இருந்து, பலர் வந்து அவனை வணங்கி சென்றனர். மாடன் என்ற அப்பாவியும் அதில் ஒருவன். அவனுக்கு ஞானம் பெற வேண்டும் என்பதில் பெரிய ஆசை. எப்படியாவது இந்த புது சித்தரிடமிருந்து ஞானம் பெற வேண்டுமென துடித்தான் அவன்.

தினமும் மாடன் திருட்டுசித்தரிடம், தன்னை சீடனாக ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுவான். எப்பொழுதும் சகஜமாக



இருக்கும் சித்தர், இந்த வேண்டுகோள் வந்தவுடன் பாராமுகமாகி விடுவார். உண்மையில் திருடனுக்கு இந்த மாடன் பெரிய தொந்திரவு. "நமக்கு ஞானமோ வைராக்கியமோ கிடையாது. நமக்கு வந்த நல்வாழ்வில் இவன் ஒரு தொல்லை" என நினைத்து வந்தான் திருடன். சிலசமயம் மாடனை அவன் துரத்தியும் விட்டிருக்கிறான். ஆனால் மாடன் அப்பாவி; மேலும் பெரியோர்கள் அருளை எளிதில் பெற முடியாது என்று பலர் சொல்ல கேட்டிருக்கிறான். அதனால் அவன் திருடனை விடவே இல்லை.

பூவோடு சேர்ந்த நாறும் மணமுறும் என்பது போல் மாடனால் சில சமயம் திருட்டு சித்தர் அடக்கமுறுவார். அவற்றையெல்லாம் மாடன் தனது ஞானதாபத்தினால் துரத்தி விடுவான். கண்ணசைத்தலினாலும், புன்முறுவலினாலும், அருளுவது போல் கையசைப்பதனாலும், மாடனை ஏமாற்றி வந்தான் திருடன். பொறுத்து பொறுத்து பார்த்த மாடன் ஒருமுறை "அய்யா! நீங்கள் பெரிய ஞானி. நான் பன்முறை தங்களிடம் பிரார்த்தித்தும், எனக்கு தங்களது நிலையை அருளாதது எனக்கு மிகுந்த வேதனை தருகிறது. என்ன செய்து தாங்கள் இந்நிலையை அடைந்தீர்களோ அதை எனக்கு அருளாமல் நான் உங்களை விட்டு விலக மாட்டேன்" என்று புகழ்ச்சியும், வேண்டுகோளும், பிடிவாதமுமாக பேசினான். இதைக் கேட்டவுடன், திருட்டு சித்தரின் ஞானம் பறந்து விட்டது. அவர் மனது இரங்கினார். புன்முறுவலுடன் அதிசயமாய் பேசினார். "மாடா! உனக்கு எந்நிலை என்ன என்பது தெரிய வேண்டும். அவ்வளவுதானே! அதோ அம்மரத்தின் பின்னால் போய் நில். நானே உனக்கு அந்நிலையை தருகிறேன்" என்றார்.

வியப்பும் சந்தோஷமும் ஒருங்கே சேர, திருடனை வணங்கி விட்டு, மரத்தின் பின்னே சென்று ஒதுங்கினான், மாடன். பழம் நறுக்கும் கத்தியுடன் பின்னே சென்ற திருடன், மாடனின் மூக்கை நேர்த்தியாக அறுத்து விட்டு "இதுதான் எந்நிலை; புரிந்துகொள்" என்றான்!!! மாடன் மூக்கும் மகிழ்ச்சியும் இழந்து நின்றான்.

*சென்ற மாத நிகழ்ச்சிகள்*

**ஏப்ரல் 28 முதல் யோகிராம்சுரத்குமார் நாமசங்கீர்த்தனம் –** சென்னை ப்ரேமிக பவனத்தில் பகவான் யோகிராம்சுரத்குமார் பக்தர்களால் ஏப்ரல் 28ஆம் தேதி முதல் "யோகிராம்சுரத்குமார்" நாமகீர்த்தனம் அகண்டமாய் நடைபெற்று வருகிறது. ஜுன்14 வரை நடக்க உள்ள இதை, ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் துவக்கி வைத்தார்.

**மே 4 முதல் 13வரை நாங்கூர் – மதுரபுரி ஆஸ்ரமம் – வசந்தோத்ஸவம் –** மதுரமான மஹனீயரில் குறிப்பிட்டபடி திருநாங்கூரில் ப்ரேமிக வரதன் விருப்பப்படி துவங்கிய வசந்தோத்ஸவம் ஆறாம் தேதியிலிருந்து மதுரபுரி ஆஸ்ரமத்தில் தொடர்ந்து நடந்து முடிந்தது.

**மே 12 முதல் 21வரை அண்ணாநகர் – நாலாயிரதிவ்யபிரபந்த பாராயணம் –** ஸ்ரீபலராமன் அவர்கள் இல்லத்தில், ஸ்ரீராம்குமார் மற்றும் ஸ்ரீவல்லபதாஸ் ஆகியோரால் நாலாயிர திவ்யபிரபந்த பாராயணம் செய்யப்பட்டது. மே16ஆம் தேதி அக்ஷயதிருதியை அன்று, காலை பாராயணத்தில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் கலந்து கொண்டார். மாலையில் ஸ்ரீராமானுஜரின் சரித்திரம் அயனாவரம் கரியமாணிக்கம் பெருமாள் கோவிலில் மிக அழகாக ஸ்ரீராம்குமார் அவர்களால் எடுத்துரைக்கப்பட்டது. தினமும் இதில் பல அன்பர்கள் கலந்து கொண்டனர்.

**Self Improvement workshop in Malaysia மே 12 –** மலேசியா தலைநகரம் கோலாலம்பூரில் ராஜேஸ்வரிஜி, ப்ரேமலதாஜி மற்றும் நாதன்ஜி ஆகியோர் மிக ஆர்வமுடன் நாமப்பணிகளை ஆற்றி வருகிறார்கள். சென்ற வருடம் ஸ்ரீராமானுஜம் அங்கு சென்று, சத்சங்க நிகழ்ச்சிகளை நடத்தி வந்தார். இவ்வருடம் ஸ்ரீபாக்யநாதன் சென்றிருந்தபொழுது, அங்கு நாமத்வாருக்காக பிரத்யேகமாக ஒரு இடத்தை திறந்து வைத்தார். மே12ஆம் தேதியன்று சுனிதாஜி இங்கு சுமார் 60சிறார்களுக்கு ஒழுக்கக்கட்டுப்பாடு மற்றும் **Self Improvement workshop** ஒன்றை நடத்தினார். சுனிதாஜி அவர்கள் **UNHCR** அகதிகளுக்காக பல சமூக சேவைகளில் மிகவும் ஈடுபட்டு



பணியாற்றியவர். இவ்விதமான பணிகளில் **corporate training** பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. முன்னதாக ராஜேஸ்வரிஜி, ஸ்ரீஸ்வாமிஜியின் கருத்துக்கள் மற்றும் நாமத்வாரின் லட்சியம் குறித்து பேசினார்.

**மே 16– சமஸ்கிருத கல்லூரி உபன்யாசம் –** அக்ஷயதிருதியை முன்னிட்டு சென்னை சமஸ்கிருத கல்லூரியில் மாலை 7மணி அளவில் நாமமகிமை குறித்து ஸ்ரீஸ்வாமிஜி உபன்யாசம் செய்தார். ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்கு வரவேற்பு கொடுத்து மஹோமஹோபாத்யாய முல்லைவாசல் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் வரவேற்புரை ஆற்றினார். ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் சங்கர விஜயம் குறித்தும், காஞ்சி மஹாஸ்வாமிகளின் வாழ்விலிருந்து ரசமான சம்பவங்கள் குறித்தும், நாம மகிமை குறித்தும் உபன்யாசம் செய்தார். போதேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள், நாமசித்தாந்தம் செய்த விதத்தையும் எடுத்துரைத்தார். சுமார் 200அன்பர்கள் திரளாய் வந்திருந்து குருவருள் பெற்று சென்றனர்.

**மே16–22 – ஆலப்பாக்கம் பாகவத பாராயணம் –** அக்ஷயதிருதியையன்று மதுரமுரளி பவனத்தில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் பாகவத பாராயணத்தை துவங்கி வைத்தார். மே23ஆம் தேதி ராதாகல்யாணத்துடன் இது நன்கு நடந்து முடிந்தது.

**மே 22 – தாமரைப்பாக்கம் –** வாலாஜா - ஆரணி மார்க்கத்தில் உள்ள தாமரைப்பாக்கத்தில் நடந்த கிராம கோவில்கள் கும்பாபிஷேக நிகழ்ச்சியில், ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் கலந்து கொண்டார். கிராம எல்லையில் அன்பர்கள் ஸ்ரீஸ்வாமிஜியை சிறப்பாக வரவேற்று மரியாதை செய்தனர். 1000அன்பர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சியில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், கோவில்கள் பாரதத்தில் அழகாய் அமைந்திருக்கும் விதம் குறித்தும், மஹாபாரத சம்பவங்கள் குறித்தும் சுமார் முக்கால் மணி நேரம் பேசினார். இங்கு கோவிலில் சிவன் பத்மத்தில்(தாமரையில்) அமர்ந்திருப்பதால், இதற்கு பத்மபுரி என பெயர். இதுவே பின்னர் தாமரைப்பாக்கம் என பெயர் பெற்றது என

ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் பேசும்பொழுது கூறினார். வரவேற்பு ஏற்பாடுகளை, தாமரைப்பாக்கம் பஞ்சாயத்து தலைவர் திரு.ந.வ.கிருஷ்ணன் அவர்கள் செய்திருந்தார்.

**மும்பை மே 8ஆம் தேதி முதல் –** சௌ.பூர்ணிமாஜியின் சத்சங்க நிகழ்ச்சிகள் மும்பையின் பல இடங்களில் நடந்து வருகிறது. மே9 அன்று மும்பை அம்பர்நாத் பாலாஜி கோவிலில் 75அன்பர்கள் முன்னிலையில் "பக்திக்கு பகவான் சுலபம்" என்ற தலைப்பில் ஹிந்தியில் உபன்யாசம் செய்தார். முன்னதாக 20நிமிடத்திற்கு மஹாமந்திரகீர்த்தனமும் நடைபெற்றது. 1974க்கு பின் இப்பொழுதுதான் இங்கு கதாசிரவணம் நடக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**மார்ச் 29 முதல் ஏப்ரல் 2ஆம் தேதி வரை சியாட்டில் அமெரிக்கா –** GOD US சார்பில் அமெரிக்கா சியாட்டிலில் 25சிறார்களுக்கு ஒரு விடுமுறை கேம்ப் நடத்தப்பட்டது. குதூஹலம் நிறைந்த இந்நிகழ்ச்சியில், பாரதீய கலாசாரமும், யோகா, சூரிய நமஸ்காரம், பாரதத்திலுள்ள புனித தலங்கள் ஆகியன குறித்தும் எடுத்து சொல்லப்பட்டது. ஓவியம், சங்கீதம் கலந்த போட்டிகள், சம்பிரதாய பஜனை முறைகள், பக்தர்களின் பாடல்கள் ஆகியன நிகழ்ச்சிகளின் பங்காக இருந்தன.

**பெங்களூர் மாதுர்யா** CAMP **மே 6 முதல் 17வரை** மேற்கண்ட நிகழ்ச்சி போலவே பெங்களூர் கோரமங்களாவில் GOD INDIA சார்பில் ஒரு கேம்ப் சிறார்களுக்காக மே மாதம் 6லிருந்து 17வரை நடைபெற்றது. இதில் 41 குழந்தைகள் கலந்து கொண்டனர். இதில் அமெரிக்கா சியாட்டிலில் நடந்த நிகழ்ச்சிகள் போல மட்டுமின்றி, கூடுதலாக புராண பாராயணங்களும், நெருப்பின்றி செய்யக்கூடிய சமையல், முதலுதவி ஆகியனவும் இடம் பெற்றிருந்தன. நிறைவு நாளன்று குழந்தைகளும் பெற்றோர்களுமாக 100பேர் வந்து இருந்தனர். பெற்றோர்களுக்கு இது மிகவும் பிடித்திருந்தது குறிப்பிடத்தக்கது. ஒரு கைதேர்ந்தவரை கொண்டு ஒரு puppet showவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது குழந்தைகளுக்கு ஏக குதூஹலமாக இருந்தது.



## ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்

- ஜனனி ஸ்ரீதேவகிநந்தன் கோஸ்வாமி-1



ஸ்ரீதேவகிநந்தன்கோஸ்வாமி ப்ரபுபாதருடைய பிறப்பு ஒரு மாபெரும் பரம்பரையில் ஏற்பட்டது. நித்யானந்தருடைய பரம்பரையில் பதினோராவது தலைமுறையில் ஸ்ரீயசோதாநந்தரின் புத்திரராக இவர் பிறந்தார். பாவ பக்தி என்பதை ஒரு வடிவமாக ஆக்கினால், அதுவே ஸ்ரீகோஸ்வாமி என்று கூறும் அளவிற்கு இவர் மிகவும் உயர்ந்த பாவுக பக்தர் ஆவார். ஸ்ரீபாத்நித்யானந்தரின் பரம்பரையில் வந்த இவருக்கு இது தகுமேயல்லவா!

படிப்பு என்று பார்த்தால் இவரது வித்தியாப்யாஸம் வெகு சாமான்யம்தான். ஆனால் இவர் பிறவியிலேயே "ப்ரேமை" எனும் மாபெரும் துர்லபமான வித்தையை கற்றே பிறந்தார். நாமஜபத்திலும், டாகுர் சேவையிலும் அவருக்கு ஆரம்பத்திலிருந்தே மிகுந்த ஈடுபாடு இருந்தது. ஸ்ருங்கார வடத்தில் பூஜாரி இருந்த போதிலும், நிதாய்-கௌர் மூர்த்திக்கு இவர், தானே ப்ரபோதனம், பூஜை,ஸ்ருங்காரம் முதலியவைகளை வெகு உத்ஸாஹத்துடன் செய்வார். இந்த நேரம் போக மீதி நேரங்களில் சதா ஹரிநாம ஜபம் செய்தவண்ணம் இருப்பார். வீட்டு காரியங்கள் எதிலும் அவர் சம்பந்தப்படவே மாட்டார். வீட்டு மற்றும் ஜமீன் காரியங்களை, அவரது இரு சகோதரர்களே கவனித்து கொள்வார்கள்.

கௌர்-நிதாயிக்கு இவர் மிகவும் சிரத்தையுடன் பூஜை செய்வார். அவர்களுடைய

இரவு, அவ்விளைஞனின் பெற்றோர் கனவில் நிதாய் மஹாராஜ் தோன்றி "உங்களுடைய பிள்ளை என்னுடைய பிரிய குழந்தையின் உடலை ஊசியால் குத்தி துன்புறுத்தினான். விடிந்தவுடனே இந்த மஹா அபராதத்திற்கு ப்ராயஸ்சித்தம் செய்யவில்லையானால் ஸர்வநாசம் ஏற்படும்" என்று கோபாவேசத்துடன் கூறினார்.

ஸ்ரீவிக்ரஹத்திற்கு வியர்க்கிறது என்று கூறி துடைத்து விட்டு, மணிக்கணக்கில் அவர்களுக்கு அவர் விசிறுவார். ஆனால் பார்ப்போருக்கு ஒரு வியர்வை துளி கூட கண்ணில் படாது.

ஒருமுறை கோஸ்வாமி ப்ரபுபாத் கல்கத்தாவிலுள்ள ஒரு பக்தருடைய வீட்டிற்கு சென்றிருந்தார். இரவு நகரசங்கீர்த்தனம் நடைபெற்றது. அப்பொழுது கோஸ்வாமி ப்ரபுபாதருக்கு பாவாவேஸம் ஏற்பட்டது. பாவத்தில் நடனமாடத் தொடங்கிய அவர், ஆடி ஆடி கடைசியில் "ஹா நிதாயி" என்று கூறி மூர்ச்சையாகி விட்டார். இரவு முழுவதும் அவர் இந்நிலையிலேயே இருந்தார். அங்கு வந்திருந்த ஒரு இளைஞனுக்கு, இவரது பாவம் செயற்கையாக இருக்குமோ என்ற சந்தேகம் ஏற்பட்டது. யாருக்கும் தெரியாமல் அவன் ஒரு ஊசியை வைத்து அவரது உடலில் பல இடத்தில் குத்தினான். ஆனால் இச்செயலால் கோஸ்வாமியுடைய உடலில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை. அவர் மூர்ச்சையிலேயே இருந்தார். அந்த இளைஞன் தனது செயலினால் வெட்கி, அங்கிருந்து சென்று விட்டான். ஆனால் அன்று இரவு, அவ்விளைஞனின் பெற்றோர் கனவில் நிதாய் மஹாராஜ் தோன்றி "உங்களுடைய பிள்ளை என்னுடைய பிரிய குழந்தையின் உடலை ஊசியால் குத்தி துன்புறுத்தினான். விடிந்தவுடனே இந்த மஹா அபராதத்திற்கு, ப்ராயஸ்சித்தம் செய்யவில்லையானால் ஸர்வநாசம் ஏற்படும்" என்று கோபாவேசத்துடன் கூறினார்.

விடிந்தவுடன் அந்த இளைஞனோடு அவனது பெற்றோர்களும் சென்று, ப்ரபுபாதருடைய சரணகமலங்களில் சாஷ்டாங்கமாக விழுந்தனர். அந்த இளைஞன் அழுதவாறே "தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும். நான் ஒரு முட்டாள். அதனால்தான் உங்களுக்கு பெரும் கஷ்டத்தையளித்து விட்டேன். தயவு செய்து என்னை மன்னியுங்கள்" என்று கூறி ப்ரார்த்தித்தான்.

(தொடரும்)



## மாலே மணிவண்ணா – 84

–மகாவித்துவான் மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

ஸ்ரீமத்பாம்பன் குமரகுருதாசஸ்வாமிகளின் வழிபாட்டுக்குரிய ஆச்சார்யராக விளங்கும் அருணகிரிப்பெருமான், திருமாலே எல்லாம் என்று சொல்வாராயின், பரிபாடல் சொல்வதில் வியப்பில்லை அல்லவா? கி.பி.முதலாம் நூற்றாண்டை சேர்ந்த பரிபாடல் நெறி 14-ஆம் நூற்றாண்டை சார்ந்த அருணகிரிநாதர் திருப்புகழில் மலர்ந்து மணம் வீசுவதை அறிந்து மகிழலாம்.

அங்கை பெண்குழல் என்று தொடங்கும் திருச்செந்தூர் திருப்புகழ் (953) இந்த அற்புதத்தை நமக்கு விளக்குகிறது.

மங்குல் இன்புறு வானாய் வானூடு
அன்று அரும்பிய காலாய் நீள்கால்
மண்டுறும் பகை நீறா வீறா எரி தீயாய்
வந்து இரைந்து எழு நீராய் நீர்சூழ்
அம்பரம் புனை பாராய் பாரேழ்
மண்டலம் புகழ் நீயாய் நானாய் மலரோனாய்
உங்கள் சங்கரர் தாமாய் நாமார்
அண்ட பந்திகள் தாமாய் வானாய்
ஒன்றினும் கடை தோயா மாயோன் மருகோனே
ஒண்தடம் பொழில் நீடூர் கோடூர்
செந்திலம்பதி வாழ்வே வாழ்வோர்
உண்ட நெஞ்சறி தேனே வானோர் பெருமாளே
(அங்கை மென்குழலாய்வார் போலே ..........
இன்ப சிங்கியில் வீணே வீழாது அருள்வாயே)

என்னும் இத்திருப்புகழில் ஆகாயமாகவும், காற்றாகவும், தீயாகவும், நீராகவும், கடலை ஆடையாய் உடுத்த நிலமாகவும், ஏழுலகமும் புகழும் முருகப்பெருமானாகிய நீயாகவும், ஆன்மாவாகிய

யானாகவும், பிரமனாகவும் உங்கள் தந்தையாகிய சிவபிரானாகியும், எல்லாமாயும், அல்லவாயும் உள்ள திருமாலின் மருமகனே! என்று முருகப்பெருமானை அழைக்கிற காட்சியை பார்க்கிறோம்.

இதையே "ஆலமும் கடம்பும் அவ்வவை மேவிய வெவ்வேறு பெயரோய்" என்று பரிபாடல் 2000 ஆண்டுகளுக்கு முன்னேயே சொல்லி விஷ்ணு பரத்வத்தை நிலை நாட்டியது. எல்லா இடங்களிலும் நீயே இருக்கிறாய். நீ இல்லாத இடம் என்று எதுவும் இல்லை என்கிறது.

> திருச்செந்தூர் திருப்புகழில் அருணகிரிநாதர் ஆகாயமாகவும் காற்றாகவும் தீயாகவும் நீராகவும் கடலை ஆடையாய் உடுத்த நிலமாகவும் ஏழுலகமும் புகழும் முருகப்பெருமானாகிய நீயாகவும் ஆன்மாவாகிய யானாகவும் பிரமனாகவும் உங்கள் தந்தையாகிய சிவபிரானாகியும் எல்லாமாயும் அல்லவாயும் உள்ள திருமாலின் மருமகனே! என்று முருகப்பெருமானை அழைக்கிற காட்சியை பார்க்கிறோம்

மேலும் -பிரகலாதன் இரணியனிடம் சொல்லும்பொழுது,

"சாணினும் உளன் ஓர் தன்மை அணுவினை சதகூறிட்ட
கோணினுன் உளன் மாமேருக்குன்றினும் உளன் இந்நின்ற
தூணினும் உளன் நீ சொன்ன சொல்லினும் உளன் இத்தன்மை
காணுதி விரைவின்" என்றல்லவா சொன்னான். மேலும் தொட்ட தொட்ட இடம் தோறும் தோன்றுவான் ஹரி என்று சொல்லியதையும் சேர்த்து பார்க்கும்பொழுது "எவ்வயினோயும் நீயே" என்னும் பரிபாடல் தத்துவம் நன்கு விளங்கி விடுகிறது.

(தொடரும்)



## சனாதனப் புதிர் : பகுதி – 15 விடைகள்

–ஆத்ரேயன்



1. ஐந்து - பத்ரி - முக்தி லிங்கம்; நேபாளம் - அரலிங்கம்; சிருங்கேரி - போகலிங்கம்; காஞ்சீபுரம் - யோகலிங்கம்; சிதம்பரம் - மோக்ஷலிங்கம்.
2. அருண்மொழிவர்மன் என்ற அரசனின் மற்றொரு பெயர் - ராஜராஜன் - திருமுறை கண்ட சோழன்.
3. நமது பிறவிக்கு காரணமாக இருந்த தந்தை; பூணூல் போடுபவர் (ப்ரும்மோபதேசம் செய்பவர்), கல்வியை போதிப்பவர், உணவு கொடுப்பவர், பயம்/ஆபத்து இவைகளிலிருந்து காப்பாற்றுபவர்.
4. ததாகதர் - உலகத்திற்கு உபதேசித்த வழியை பின்பற்றியவர்.
5. தெளிவு குருவின் திருமேனி காண்டல்

தெளிவு குருவின் திருநாமம் செப்பல்

தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்

தெளிவு குரு உரு சிந்தித்தல்தானே

6. திருவாசகத்தில் - முதல் இரண்டு வரி மாணிக்கவாசகரின் கேள்வி - அடுத்த இரண்டு வரி ஊமையாக இருந்த சிங்கள ராஜகுமாரியின் பதில்; நான்கு வரிகள் கொண்டது ஒரு அடி; இவ்விதம் இருபது அடிகள் கொண்டது திருச்சாழல்.
7. திருநாவுக்கரசு ஸ்வாமிகள், அப்பர், தர்மசேனர், திலகவதி - சகோதரியின் பெயர்.
8. திருவையாற்றுக்கு அருகில் இருக்கிறது. ப்ரஹ்மாவிற்கு தனி சன்னதி உள்ளது. அங்கு இருக்கும் சிவனுக்கு ப்ரஹ்மசிரக்கண்டீசர் என்று பெயர். ப்ரஹ்மாவிற்கு ஐந்து தலைகளில் ஒன்றை சேதித்த க்ஷேத்திரம்.
9. ஆந்திரபிரதேசம் - ஸ்ரீசைலம்- மல்லிகார்ஜுனம் - கிருஷ்ணா நதி; தமிழ்நாடு - திருவிடை மருதூர் - மத்யார்ஜுனம் - காவேரி; தமிழ்நாடு - திருப்புடை மருதூர் - புடார்ஜுனம் - தாமிரபரணிக்கரையில்
10. ஸ்ரீரங்கம் - ஜனாகர்ஷண யந்திரம் ; திருப்பதி - தனாகர்ஷண யந்திரம்.

**அக்ஷரமணமாலை** (ஸ்ரீஸ்வாமிஜியின் உரைகளிலிருந்து-170)

முடியடி காணா முடி விடுத்தனை நேர்
முடிவிட கடனிலை அருணாசலா

சாதனைகள் செய்யும் காலத்தில், குரு போதித்த மார்க்கத்திலும் தெய்வத்திடமும் நம்பிக்கை ஏற்படாவிடில் பலன் ஏற்படாது. எவ்வளவு சாதனை செய்தாலும் நம்பிக்கை இல்லாது போனால் அருள் கிடைப்பதில்லை. எவ்வளவு கீழானவனாக இருந்தாலும், குருவின் அருள் கிட்டிய பிறகு, அவர் நம்மை எப்படியும் கரையேற்றி விடுவார் என நினைப்பவருக்கே குரு அருள் திண்ணம். அப்படிப்பட்டோருக்கு முக்தி கிடைப்பது சுலபம்.

உலக மாயையில் மாட்டிக்கொண்டோரை கண்டு சிரிக்க வேண்டிய அவசியமில்லை. அப்படி விழுந்தோர், மறுபடி எழுந்தார்களானால் அவர்களைத்தான் பார்க்க வேண்டும். விசுவாமித்திரரின் சரித்திரம் அதைத்தான் காட்டுகிறது.

தவறு செய்தால் யாரும் இப்படித்தான் செய்வர் என நினைப்பது தவறு. மாறாக "தவறு செய்துவிட்டேனே, எனை காப்பாற்றுவாய்" என மனமுருகி வேண்டினால், அதற்கு அருளுண்டு. மாயையை வெல்வது ஒன்றும் அத்தனை எளிதல்ல. "பற்றே இல்லாதவனிடம் கூட ஒரு பூனைக்குட்டியை கொடுத்து பற்றை வளர்ப்பாள் மாயை" என ராமகிருஷ்ண பரமஹம்ஸர் சொல்வதுண்டு. முழுவதுமாக சரணாகதி செய்த ஒருவரே மாயையிலிருந்து விடுபட முடியும். இது ஒருவருக்கு சாத்யமில்லாத பட்சத்தில், முடிந்த அளவு செய்து வந்தாலும் கூட, அது முழுமையான சரணாகதியில் கொண்டு விடும்.

சரீரத்தில் கண், காது, மூக்கு, வாய் என அனைத்துக்கும் இடம் சொல்கிறோம். யோகிகள் சக்கரங்களுக்கு இடம் சொல்கின்றனர். எந்த ஒரு ஆன்மாவிற்கு இடமே சொல்ல முடியாதோ, அதற்கே கூட மார்பின் வலப்பக்கத்தில் ஒரு ஸ்தானத்தை கற்பிக்கின்றனர். எதற்கு சொல்ல முடியவில்லை என்றால் அஹங்காரத்திற்குத்தான். காரணம், அஹங்காரம் அதிகமுள்ளவன் கூட தனக்கு அஹங்காரமே இல்லை என



எண்ணுவான். ஆன்மாவிற்கு இடம் கற்பித்தாலும் சரீரத்தில் அஹங்காரத்திற்கு இடம் சொல்ல முடிவதில்லை. அப்படிப்பட்ட இந்த அஹங்காரத்தை நீயே போக்கி விடு அருணாசலா என பிரார்த்திக்கிறார் ரமண மஹரிஷிகள்.

(தொடரும்)

Madhuramurali
- Published by V.Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, Chennai - 83.
- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this Magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the Publisher of Madhuramurali.
- Views expressed in Articles are those of the respective authors and do not reflect the views of the magazine.
- Advertisements in Madhuramurali are invited.

மதுரமுரளி சந்தாதாரர்கள் ஆக விரும்புகிறவர்கள்
Guruji Sri Muralidhara Swamigal Mission என்ற பெயருக்கு 51, 7th Avenue Ashok Nagar, Chennai - 83 என்ற முகவரிக்கு ரூ120/ஐ (ஒரு வருட சந்தா) உள்ளூர் காசோலை/ டி.டி./ மணியார்டர் அனுப்பவும். நேரில் ரொக்கம் கொடுத்தும் சந்தாதாரர் ஆகலாம். தங்களது முகவரியை மிகவும் தெளிவாக குறிப்பிடுமாறு கேட்டுக்கொள்கிறோம். PH:+914424895875

**ஸ்ரீஸ்வாமிஜியின் நிகழ்ச்சிகள்**

| | |
|---|---|
| மே 27 | மாம்பலம் - நரசிம்ம ஜெயந்தி - உபன்யாசம் |
| மே 28 | காஞ்சி மாஹாஸ்வாமிகள் ஜெயந்தி |
| ஜூன் 8, 22 | ஏகாதசி |
| ஜூன் 6 | தாராபுரம் - மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை |
| ஜூன் 9-12 | தஞ்சாவூர் நவநீதகிருஷ்ணன் கோவிலில் உபன்யாசம் |
| ஜூன் 25-ஜூலை 1 | பெங்களூர் பாகவத சப்தாஹம் |
| ஏப்ரல்28 - ஜூன்14 | ப்ரேமிக பவனம் காலை 6மணி முதல் மாலை 6மணி வரை "யோகிராம்சுரத்குமார்" அகண்ட நாமகீர்த்தனம் |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary
to **HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875,
Email : contact@namadwaar.org
என்னும் முகவரிக்கு அனுப்பவும்.